செய்தி வெளியீடு எண் : 101 நாள் : 14.01.2023

**தமிழ்நாடு அரசின் சார்பில் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவையொட்டி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை செயலர் /உள்ளுறை ஆணையர் திரு.ஆஷிஷ் சாட்டர்ஜி, அவர்கள் 14.01.2023 அன்று கோலப்போட்டி மற்றும் விளையாட்டு போட்டியினை தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு அரசின் சார்பாக புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் விழா நிகழ்ச்சிகள் 14.01.2023, 15.01.2023 ஆகிய தினங்களில் சிறப்பாக நடைபெறுகிறது. தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவினையொட்டி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை செயலர் /உள்ளுறை ஆணையர் திரு.ஆஷிஷ் சாட்டர்ஜி, அவர்கள் 14.01.2023 அன்று காலை 11.00 மணியளவில் கோலப்போட்டி மற்றும் விளையாட்டு போட்டிகளை தமிழ்நாடு இல்லத்தில் தொடங்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து கோலப்போட்டியில் வரையப்பட்ட ஒன்பது கோலங்களை நடுவர் குழுவுடன் உள்ளுறை ஆணையர் பார்வையிட்டார் பின்னர் நடுவர் குழுவினர் சிறந்த கோலங்களை தேர்வு செய்தனர்.

பொங்கல் விழாவை யொட்டி இன்று (14.01.2023) மாலை புது டெல்லியில் பணியாற்றும் ஓய்வு பெற்ற மற்றும் பணியில் உள்ள தமிழ் நாட்டை சேர்ந்த இந்திய ஆட்சி பணியாளர்கள், இந்திய காவல்பணி அலுவலர்கள் தமிழ் நாட்டை சேர்ந்த பல்வேறு நிலையில் டெல்லியில் பணியாற்றும் அலுவலர்களுடன் போகி பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதனை தொடர்ந்து கலை பண்பாட்டு துறை மற்றும் தென்னக கலை பண்பாட்டு மையம் சார்பாக பரதநாட்டியம், நையாண்டி மேளம், தப்பாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. பொங்கல் விழாவை முன்னிட்டு பொதிகை மற்றும் வைகை தமிழ் நாடு இல்லங்கள் வண்ண விளக்குகளால் ஜொலித்தன.

பொங்கல் விழாவையொட்டி 15.01.2023 அன்று காலை 11.00 மணிக்கு வைகை தமிழ்நாடு இல்லத்தில் 25 பெண்கள் பொங்கல் வைத்து பொங்கல் விழா கொண்டாடப்பட உள்ளது. அதன் பிறகு

பொங்கல் விழா தொடக்க நிகழ்ச்சி மாலை 3.30 மணிக்கு வைகை தமிழ்நாடு இல்லத்தில் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைக்கப்படவுள்ளது. அதனை தொடர்ந்து தமிழ்நாட்டின் பாரம்பரிய பரதநாட்டியம், நாட்டுப்புற கலைஞர்களின் நையாண்டி மேளம், தப்பாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், நாட்டுப்புற பாடல் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

பொங்கல் விழாவையொட்டி பல்வேறு பிரிவின்கீழ் ஓவிய போட்டி, கபடி போட்டி, எரிபந்து, சக்கர நாற்காலி, கோ–கோ மற்றும் உறியடி போட்டி உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் ஏற்கனவே நடத்தப்பட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பொங்கல் விழாவில் மொத்தம் 199 நபர்களுக்கு 15.01.2023 அன்று நடைபெறும் நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

பொங்கல் விழாவையொட்டி சுற்றுலாத்துறை, ஆவின், பூம்புகார், கோ–ஆப்டெக்ஸ், டாம்ப்கால், இன்ட்கோசர்வ், மகளிர் திட்டம் ஆகிய துறைகளின் கண்காட்சி மற்றும் புத்தக கண்காட்சியும் விற்பனையும் தொடங்கியுள்ளது. இக்கண்காட்சியில் தமிழ்நாட்டை சார்ந்த பல்வேறு உணவகங்களும் பொதிகை தமிழ்நாடு இல்லத்தில் செயல்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு இல்லம் கூடுதல் உள்ளுறை ஆணையர் திரு. சின்னதுரை, கூடுதல் இயக்குனர் திரு.பொ.முத்தையா, முதன்மை கணக்காளர் திரு. சீனிவாசன், மேலாளர் திரு. தெய்வசிகாமணி, சுற்றுலா அலுவலர் திரு. சிவராஜ், உதவி பொறியாளர் திரு. சதீஷ், திரு. குமரேசன், சம்பள உதவி கணக்கு அலுவலர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in